<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>

<u>**OS. No**.43/2020</u>

<u>**D.W**. 1 நாள் - 17.06.2022</u>

| | | |
|---|---|---|
| பெயர் | : | தமிழ்செல்வன் |
| த/பெயர் | : | ஜெயராமன் |

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

நில அபகரிப்பு பிரிவில் கொடுத்த புகாரின் நகலை நான் வைத்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிட்டிருந்த ஆவணங்களில் மேற்படி புகார் நகலை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ரசீது ஒரு குமார் என்பவர் கொடுத்த புகாரின் மீதான ரசீது என்றால் சரிதான். **அது பி.சா.ஆ.7 ஆகும்.** நான் கொடுத்ததாக சொல்லும் புகாரின் நகலையும், அதற்கான ரசீதியையும் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 03.2.2012 ம் தேதியிட்ட தடநடை ஒப்பந்த பத்திரமானது எனக்கும் 3 ம் வாதிக்கும் ஏற்பட்ட பத்திரம் என்றால் சரிதான். **அது பி.சா.ஆ.8 ஆகும்.** மேற்படி தடநடை ஒப்பந்த பத்திரத்தில் அதில் கண்டுள்ள சொத்து 26.08.1987 ல் தேதியில் 3 ம் வாதிக்கு ஏற்பட்ட தான்செட்டில்மெண்ட் படி பாத்தியப்பட்ட சொத்து என்று காண்பிக்கப்பட்டள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து ச.எண்.58/2 நடு பாகம் 25 செண்ட் என்றால் சரிதான். அந்த சொத்தில் தான் 3 ம் வாதி எனக்கு தடநடை பாத்தியம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் எதற்காக புகார் கொடுத்தேன் என்றால் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. புகார் சம்மந்தமாக என்னை யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அந்த புகாருக்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சம்மந்தம் உள்ளது. எனக்கும் அந்த புகாருக்கும் என்ன சம்மந்தம் என்றால் புகார் கொடுப்பதற்கு நான் தான் எனது சித்தாப்பாவிற்கு உறுதுணையாக இருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் 1 ம் வாதி 3 ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட்

பத்திரத்தின் ரத்து பத்திரம் ஆகும். **அது பி.சா.ஆ.9 ஆகும்.** இந்த பத்திரம் எனக்கு எவ்வாறு கிடைத்தது எ்றால் பன்னீர் செல்வம் என்னிடம் கொடுத்தார். இந்த பத்திரத்திற்கும் எனக்கும் என்ன சம்மந்தம் என்றால் பன்னீர்செல்வத்தின் பாகத்திற்கு மேல் புறம் என்னுடைய பாகம் ஆகும். பன்னீர்செல்வம் பாகம் என்பது ச.எண்.58/2B என்றால் சரிதான். ச.எண்.58/2B க்கு இவ்வழக்கு சம்மந்தப்பட்டது. சஎண்.58/2B க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் இவ்வழக்கான அ.வ.எண்.43/2020-க்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவவழக்கு ச.எண்.58/2B க்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.9 ஆன தானசெட்டில்மென்ட் ரத்து பத்திரத்தின் மூலபத்திரம் எங்குள்ளது என்றால் 3 ம் வாதி பன்னீர்செலவத்திடம் உள்ளது. அந்த பத்திரம் 23.3.2011 ல் 1 ம் வாதி 3 ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த தான்செட்டில்மெணட் பத்திரம் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் 3 ம் வாதியிடம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரம் 03.02.2012 ம் தேதியில் ரத்தினம் மற்றும் சின்னகண்ணு அதாவது 3,6 பிரதிவாதிகள் 1 ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் ரத்து பத்திரம் என்றால் சரிதான். **மேற்படி ரத்து பத்திரம் பி.சா.ஆ.10 ஆகும்.** 2.03.2000 ம் தேதியில் 3,6 பிரதிவாதிகள் 1 ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த அசல் கிரையபத்திரம் யாரிடம் உள்ளது என்றால் 3 ம் வாதி பன்னீர்செல்வத்திடம் உள்ளது. பி.சா.ஆ.8 ,9 மற்றும் 10 மூன்று பத்திரங்களும் ஒரே தேதியில் எழுதப்பட்டது என்றால் சரிதான். பத்திர ஆவணங்களை தயார் செய்தது ஒரே நபர் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் பி.சா.ஆ.7 ஆவணத்தின் அடிப்படையில் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இரண்டு ரத்து ஆவணங்களும் ஒரு தடநடை ஒப்பந்த பத்திரமும் நான் முன்னின்று எழுதப்பட்டது என்றால் சரியல்ல, வாதிகள் தான் எழுதினார்கள். ரத்து ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. மேற்படி பி.சா.ஆ.8,9,10 ஆவணங்கள் ஏற்பட்ட விவரம்

எனக்கு நேரிடையாக தெரியும் என்றால் சரிதான். இரண்டு ரத்து பத்திரங்கள் யாரிடம் இருக்கவேண்டும் என்றால் வாதிகளிடம் இருக்கவேண்டும். மேற்படி இரண்டு பத்திரங்கள் வாதிகளிடம் இருக்கவேண்டிய பத்திரங்களையும் நில அபகரிப்பு பிரிவில் உதவி ஆய்வாளர் பாபு என்பவர் மிரட்டி என்னிடம் வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி பி.சா.ஆ.8,9,10 ஆவணங்களையும் 1ம் வாதியை மிரட்டி எழுதிவாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உள்ளபடியே அசல் கிரைய பத்திரத்தையும், அசல் தான செட்டில்மெண்ட் பத்திரத்தையும் யாருக்காக 1ம் வாதி எழுதிகொடுத்தாரா அவர்கள் வசம் தான் இருக்கவேண்டும் என்று சொன்னாலும் வாதிகள் குறிப்பிடுவது போல மேற்படி ஆவணங்களை 1ம் வாதியை நிலஅபகரிப்பு பிரிவு காவல் உதவி ஆய்வாளர் மூலம் மிரட்டி எழுதிக்கொண்டதால் தான் மேற்படி அசல் ஆவணங்கள் வாதிகள் வசமே உள்ளது என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி பானுமதி என்பவரின் எனது சித்தப்பாவின் மனைவி ஆவார். 4ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதியின் தாயார் ஆவார். 1ம் பிரதிவாதி எனது தாத்தா. நானும், இதர பிரதிவாதிகளும் ஒரே குடும்பாக வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. சின்னகண்ணு வசமும், ரத்தினம் வசமும் அதாவது 3 மற்றும் 6ம் பிரதிவாதி வசம் இருக்கவேண்டிய பத்திரம் என் வசம் எப்படி வந்தது என்றால் வாதிகளே என்னிடம் தந்தார்கள். 3,6 பிரதிவாதிகளுக்கு மேற்படி பத்திரங்கள் என் வசம் உள்ள விவரம் தெரியும். என்னிடம் 3,6 பிரதிவாதிகள் கொடுக்கசொன்னார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது சித்தப்பா குமார் புகார் கொடுத்தார் என்பதும் வாதிகளே பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்று நான் சொல்லும் சங்கதிகள் உண்மையான சங்கதிகள் அல்ல என்றால் சரியல்ல நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி 1ம் வாதியிடம் ரத்து பத்திரங்களை எழுதி நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் வாதி ஆசிரியராக பணிபுரிவாதல் அவரது வேலைக்கு ஆபத்து வந்துவிடும் என்று சொன்னதின் பேரில் 1ம் வாதி மேற்படி கையெழுத்து செய்துள்ளார்எ ன்றால் சரியல்ல. எந்த பத்திரங்களில் 1ம் வாதி கையொப்பம் செய்கிறார் என்ற விவரம்

தெரியாமல் கையொப்பம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் வாதிகளே பத்திரம் எழுதி என்னிடம் கொடுத்தார்கள் என்ற விவரம் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞபாகமில்லை. அங்காயி எனது தகப்பனாரின் பாட்டி ஆவார். அங்காயிக்கு 1ம் வாதி சடையன், 1ம் பிரதிவாதி பெரியசாமி. 3ம் பிரதிவாதி சின்னகண்ணு 5ம் பிரதிவாதியின் தாயரான 4ம் பிரதிவாதி நாகம்மாள் மற்றும் 6ம் பிரதிவாதியின் தாயார் பாப்பாயி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி நாகம்மாள் மேற்படி அங்காயிற்க்கு பாத்தியப்பட்ட சொத்தில் 1/5 பாகத்தை பானுமதிக்கு 26.07.2001ல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நாகம்மாள் தனது மகளான 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். நாகம்மாள் பெயரில் நானோ, எனது சித்தப்பாவோ சொத்தை எழுதிக்கொண்டார்கள் என்று புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பானுமதிக்கு 4ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த தான்செட்டில்மெணட் பத்திரம் செல்லாது என்று நான் மறுக்கவில்லை என்றாலும் பதிலுரையில் குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் நானும் , 4,5 பிரதிவாதிகள் ஆகியோர்கள் ஒன்றினைந்து பதிலுரை தாக்கல் செய்து இவ்வழக்கில் எதிர்கட்சி செய்துவருகிறோம் என்றால் சரிதான். நான் 1ம் வாதியிடமிருந்து மிரட்டி எழுதிவாங்கிய தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் கிரைய பத்திர ரத்து ஆவணங்கள் 1ம் வாதிக்கு வில்லங்கம் பார்த்த பின்னிட்டு தான் தெரியவந்தது என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரம் மற்றும் கிரைய ரத்து பத்திர ஆவணங்கள் 1ம் வாதியை மிரட்டி எழுதிவாங்கியுள்ளதால் 1ம் வாதியை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. அதேபோல 4ம் வாதி சந்திரனுக்கு 1ம் வாதி ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் 4ம் வாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரம் ஊர்ஜிதத்தில் இல்லை ரத்தாகிவிட்டது. மேற்படி பத்திரமும்

03.02.2012 ம் தேதியிலேயே ரத்து செய்யப்பட்டுவிட்டது. மேற்படி ரத்து பத்திரத்தை நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அதன் அசல் ரத்து பத்திரம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். 1 ம் வாதி 4 ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த அசல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் என் வசம் உள்ளதா என்றால் வாதியிடம் உள்ளது, என்னிடம் இல்லை. 1 ம் வாதி 4 ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த அசல் தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரம் செல்லாது என்று இவ்வழக்கில் வாதிகள் பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் சரிதான். எனது பாட்டனார் பெரியசாமிக்கு பொதுவில் பேர்பாதி சொத்துக்கள் பாத்தியப்பட்டுள்ளது என்று நான் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல, அது போன்ற ஆவணங்கள் இருந்தாலும் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது பாட்டனார் பெரியசாமி ஆவணங்களின் படி அவருக்கு உரிமை ஏற்பட்டிருந்தாலும், எனது பாட்டனாரின் தாயார் அங்காயி என்பவர்எ னது பாட்டனாரை சொத்திலிருந்து வெளியேற்றி எனது பாட்டனாருக்கு தெரியவே சொாத்துக்களை அவர் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. பூரா சொத்துக்களுக்கும் அங்காயி பெயரிலேயே பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் தவறாக ஏற்பட்டுள்ளது. பெரியசாமி உயிருடன் இருந்த காலத்தில் அங்காயி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா தவறாக ஏற்பட்டுள்ளது என்று எந்த நடவடிக்கயும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, எடுத்தார். என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் மனு கொடுத்ததிருந்தார் அதை பற்றி தெரியாது. பெரியசாமி உயிருடன் இருந்தவரை அவரது தாயார் அங்காயி பெயரில் ஏற்பட்ட பட்டாவை ஆட்சேபிக்கவில்லை என்றாலும் நான் தற்போது வழக்கிற்காக பட்டா தவறாக ஏற்பட்டு விட்டது என்றும் அதன் மீது மனு தாக்கல் செய்யப்பட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை தவிர இதர பிரதிவாதிகளுக்கு வெளி உலக அபனுபவம் இல்லை என்றால் சரியல்ல, அனைவருக்கும் அனுபவம் உள்ளது. சொத்தில் உரிமை எதுவும் இல்லாமல் உரிமை இருப்பதாக பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. சொத்துக்களில்

எனது பாட்டனாார் பெரியசாமிக்கு 1/5 பங்கு பாகம் மட்டுமே உள்ளது என்றால் சரியல்ல. 4,5 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தில் 1/5 பங்கு பாகம் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு 4,5 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தில் 1/5 பங்கு பாகம் உள்ளது என்பதை ஒப்புக்கொண்டு பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வாதிகள் கோரியபடி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.